டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 16.11.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 125 - Madurai | Online Edition

## ஆஸ்திரேலிய தூதர், வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை செயலாளர் சந்திப்பு

புது தில்லி, நவ.15

ஆஸ்திரேலிய தூதர் பிலிப் கிரீன், புதுதில்லியில் உள்ள கிருஷி பவனில் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை செயலாளர் டாக்டர் தேவேஷ் சதுர்வேதியை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும், வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளைக் கண்டறியவும் இந்த சந்திப்பு முக்கியமான பொதுத்தளமாக அமைந்தது.





இந்த சந்திப்பின் போது, டாக்டர் சதுர்வேதி இந்தியா மற்றும் ஆஸ்தி ரேலியா இடையேயான நீண்டகால மற்றும் பன்முக கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

விவசாயத்தில் இந்தியாவின் தற்போதைய முன்னுரிமைகளை கோடிட்டுக் காட்டிய அவர், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது மட்டுமல்லாமல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப் பதிலும், மக்களுக்கு ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்து வதிலும் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை வலியுறுத்தினார். பயிர் பன்முகப் படுத்தல், ஏற்றுமதியை ஊக்குவித்தல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளில் தன்னிறைவை அடைதல் மற்றும் இந்தியாவின் வேளாண் உத்தியின் முக்கிய கூறுகளாக உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற முக்கிய மான முயற்சிகளை டாக்டர் சதுர்வேதி எடுத்துரைத்தார். இந்தத் துறையை நவீனமயமாக்குவதில் துல்லிய வேளாண்மை, டிஜிட்டல் வேளாண் இயக்கம் மற்றும் சிறிய பண்ணைகளின் இயந்திரமய மாக்கல் உள்ளிட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களின் முக்கியத்து வத்தையும் அவர் வலியுறுத்தினார். கூடுதலாக, விவசாயத்தில் புதுமை மற்றும் மாற்றத்தை ஊக்குவிப்பதில் புத்தொழில் நிறுவனங் களின் வளர்ந்து வரும் பங்கை அவர் பாராட்டினார்.

ஆஸ்திரேலியாவின் முன்னுரிமைகளில் விவசாயத்தின் முக்கியத் துவத்தையும், இரு நாடுகளுக்கும் இடையிலான மேம்பட்ட ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகளையும் கிரீன் எடுத்துரைத்தார். வேளாண் தொழில்நுட்பத் துறையில் உள்ள வாய்ப்புகளை ஆராய் வதில் மிகுந்த ஆர்வம் காட்டிய அவர், இந்த நோக்கங்களை முன்னெடுத்துச் செல்ல வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். வர்த்தகம் மற்றும் ஒத்துழைப் புக்கான புதிய வாய்ப்புகளை அடையாளம் கண்டு தொடர்ந்து ஈடுபட வேண்டியதன் அவசியத்தை கிரீன் வலியுறுத்தினார். வேளாண் தொழில்நுட்பம், தோட்டக்கலை, டிஜிட்டல் வேளாண்மை மற்றும் வேளாண் இயந்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்து ழைப்பை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை இரு தரப்பும் ஒப்புக் கொண்டன. வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், ஐ.சி.ஏ.ஆர் பிரதிநிதிகள் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் ஆகியோரும் இந்த விவாதத்தில் பங்கேற்று, கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் நிலக்கடலை ரிச் தெளிப்பீர்!

## சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் யோசனை



திருச்சி, நவ.15

திருச்சி மாவட்டத்தில் பரவலாக ஆடிப்பட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது பல இடங்களில் விழுது வளர்ச்சி தென்படுகிறது. நிலக் கடலையில் விழுது உருவாகி காய் பிடிக்கும் திறனை அதிகரிக்க




சரியான நேரத்தில் ஜிப்சம் இடுதல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை போக்க நிலக்கடலை ரிச் (நிலக்கடலைக்கு தேவையான பேரூட்டச்சத்து, நுண்ணூட்டச்சத்து மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்) அளித்தல் முக்கியமான வழிமுறைகளாகும்.

### நிலக்கடலை ரிச்

நிலக்கடலை ரிச் என்பது நிலக்கடலைக்கு தேவையான பேரூட்டச்சத்து, நுண்ணூட்டச்சத்து மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டராகும். நிலக்கடலை ரிச் பூஸ்டரை ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும். நிலக்கடலை ரிச் பூஸ்டரை பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் தலா 2 கிலோ என்ற வீதத்தில் ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் 200

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



லிட்டர் தண்ணீரில் கலந்து தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

நிலக்கடலை ரிச் தெளிப்பதன் மூலம் தாவரத்திற்கு தேவையான அனைத்து சத்துக்களும் கிடைக்கப் பெறுகிறது. இதன்மூலம் பொக்குக் கடலைகள் உருவாவது குறைந்து பூ பிடிக்கும் திறன் அதிகரிக்கிறது. மேலும் வறட்சியை தாங்கும் திறன்அதிகரிக்கும். இதன் மூலம் விளைச்சல் 15 சதம் வரை கூடும்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

மேலும் விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொலைபேசி எண் : 9171717832 / 0431-2962854 தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 15.11.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 36 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 45 | 57A | உருளை(ஊட்டி) | 32 | 62 |
| 2 | வெண்டை | 40 | 46 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 30 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 15 | 18 | 60 | கேரட் | 75 | 80 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 30 | 35 | 62 | நூல்கோல் | 50 | 54 |
| 7 | பீர்க்கன் | 40 | 46 | 63 | டர்னிப் | 50 | 54 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 35 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 30 | 36 | 66 | காளிபிளவர் | 50 | 55 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 52 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 25 | 28 | 70 | புருக்கோலின் | 160 | 170 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 55 | 60 |
| 16 | பெ.வெங்காயம் (புதியது/பழையது) | 58 | 75 | 72 | குடமிளகாய் | 70 | 78 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 36 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 56 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 45 | 50 | 71A | | | |
| 20 | தேங்காய் | 50 | 55 | | | | |
| 21 | மாங்காய் | 50 | 60 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 48 | 52 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 75 | 85 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 42 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 11 | 13 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்சு | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 40 | 45 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 24 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 30 | 34 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | கண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 50 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 35 | | | | |


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பிரதமரின் முத்ரா யோஜனா குறித்த தேசியளவிலான கருத்தரங்கு MSME மற்றும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதில் வங்கிகள், தொழில்முனைவோர் மற்றும் கல்வியாளர்களின் பங்களிப்பு'



பாண்டிச்சேரி, நவ.15

புதுவை பல்கலைக்கழகத்தின் சர்வதேச வணிகத் துறை, புதுவை யூனியன் பிரதேசத்தில் வருமானம் ஈட்டுவதும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் தொடர்பாக சிறு தொழில் முனைவோர் களிடையே பிரதமரின் முத்ரா யோஜனா (PMMY) குறித்து ICSSR உடன், தேசிய அளவிலான கருத்தரங்கினை ஏற்பாடு செய்தது.

இந்த கருத்தரங்கின் தலைமை விருந்தினராக புதுவை பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் க.தரணிக்கரசு கலந்துகொண்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். இந்தியன் வங்கி புதுச்சேரி மண்டல துணை பொது மேலாளர் வெங்கடாசுப்பிரமணியன் எம், பாரத ஸ்டேட் வங்கி புதுச்சேரி மண்டல உதவி பொது மேலாளர் எஸ். அன்புமலர், இந்தியன் வங்கி மண்டல அலுவலகம் புதுச்சேரி, முதன்மை மாவட்ட மேலாளர் ஏ.சதீஷ்குமார், இந்தியன் வங்கி புதுச்சேரி முதன்மை மேலாளர் பெரியதம்பி, இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குநர் ஜோசபின் சகாயராணி ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்திப் பேசினர்.

தொடக்க உரையின் போது, பேராசிரியர் க.தரணிக்கரசு, பங்கேற் பாளர்களுக்கு இந்திய அரசின் பல்வேறு திட்டங்களை, குறிப்பாக பிரதம மந்திரி முத்ரா யோஜனா (PMMY), ஸ்டார்ட்-அப் இந்தியா, மேக் இன் இந்தியா போன்ற தொழில் முனைவோர் ஊக்கத்திற்கான திட்டங்களை மற்றும் நிதியுதவி நடவடிக்கைகளைக் குறித்துப் பேசி, சிறு தொழில் முனைவோர்கள் அதிக வாய்ப்புகளைப் பெற ஊக்கப்படுத்தினார்.

வங்கிகளின் வல்லுநர்கள், பிரதம மந்திரி முத்ரா யோஜனா மற்றும் அதன் புதுவை பிராந்தியத்திற்கு உள்ள முக்கியத்துவத்தை பற்றி விளக்கினர். சொற்பொழிவின் போது, புதுவை மண்டலத்தில் 70%க்கும் மேலாக இந்த திட்டத்தின் பயனாளிகளில் பெண்கள் முன்னிலையில் உள்ளனர் என கூறப்பட்டது. மேலும், மாணவர் களுக்கு புதிய வணிகத் திட்டங்கள் தொடங்குவதற்கும், ஏற்கனவே உள்ள வணிகங்களுக்கு மறுநிதி வழங்குவதற்கும் ஆலோசனை

மற்றும் இலவச கடன் வசதி வழங்கப்பட்டது. இந்த கருத்தரங்கு ICSSR ஆராய்ச்சி திட்டமாக, புதுவை பல்கலைக்கழகத்தின் சர்வ தேச வணிகத் துறையின் முதன்மை ஆய்வாளரான பேராசிரியர் பி.ஜி. அருளின் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் தனது ஆராய்ச்சி முடிவுகளை வங்கி அதிகாரிகள், ஆசிரியர்கள், பயனாளிகள் மற்றும் மாணவர்களிடம் சமர்ப்பித்தார். கருத்தரங்கின் ஒரு பகுதியாக, குழு விவாதம் நடைபெற்றது, இதில் நிகழ்நேர பயனாளிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

MSMEகள் மற்றும் நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதில் பிரதம மந்திரி முத்ரா யோஜனாவின் (PMMY) தாக்கம் மற்றும் எதிர்கால முன்னேற்றத்தைப் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை விவாதிக் கவும் பகிர்ந்து கொள்ளவும் இந்த நிகழ்வு பல்வேறு வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோரை ஒரே இடத்தில் ஒன்றிணைத்தது.

நிகழ்ச்சியின் இறுதியில், சர்வதேச வணிகவியல் துறையின் ஆராய்ச்சி அறிஞரான பி.சந்தோஷ் நன்றி உரை வழங்கினார்.



# தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 'தோட்டக்கலையின் வருங்காலத் தொலைநோக்கு பற்றிய பன்னாட்டு கருத்தரங்கம் – 2024'

கோயம்புத்தூர், நவ.15

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான சங்கம் சார்பில் எதிர்கால தோட்டக்கலை குறித்த பன்னாட்டு கருத்தரங்கு 14.11.24 அன்று நடந்தது. இக்கருத்தரங்;கில் 400க்கும் மேற்பட்ட அறிவியலாளர், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.




அமெரிக்கா, மலேசியா, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், லங்கா, நேபாளம் ஆகிய ஆறு நாடுகளை சேர்ந்த அறிவியலாளர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரை அளித்தனர்.

இக்கருத்தரங்கு தொடக்க விழாவில் கருத்தரங்க தலைமை அமைப்பு செயலாளர் மற்றும் முதன்மையர், தோட்டக்கலை முனைவர் பெ.ஜரின் வேதமணி, கருத்தரங்கின் முக்கியத்து வத்தை எடுத்துரைத்து அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி தொடக்க விழாவிற்கு தலைமை ஏற்றார்.

அவர் தனது தலைமை உரையில் தோட்டக்கலையின் முக்கியத்துவம் மற்றும் இளைய தலைமுறையினருக்கு சத்து நிறைந்த உணவை தோட்டக்கலை பயிர்களின் மூலம் அளிப் பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

மாறிவரும் வானிலை மாற்றங்கள் தோட்டக்கலை பயிர் சாகுபடியில் பெரும் சவாலாக உள்ளது எனவும் கூறினார். பழப்பயிர்களில் அடர்நடவு மற்றும் முறையான கிளைபடர்வு மேலாண்மை முறைகள், திசு வளர்ப்பு, செங்குத்து மற்றும் உள்ளரங்கு வேளாண்மை, நஞ்சற்ற சாகுபடி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு, பருவமில்லா காலங்களில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்கள் உற்பத்தி ஆகிய தொழில்நுட்பங்கள் வருங்கால தோட்டக்கலையில் முக்கிய பங்கு வகிக்கும் எனக் குறிப்பிட்டார்.

கொண்டா லஷ்மண் தெலுங்கானா, தோட்டக்கலை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் தண்டாராஜி ரெட்டி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

அவர் தமது உரையில், உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களின் வாழ்வை காப்பாற்றுவதில் தோட்டக் கலை முக்கிய பங்கு வகிக்கும் எனவும் ஆண்டு முழுவதும் பயிர் உற்பத்தி, உயர் சாகுபடி தொழில் நுட்பங்கள், நானோ தொழில் நுட்பம், சமச்சீர் உர மேலாண்மை, இயற்கை வேளாண்மை ஆகிய தொழில்நுட்பங்கள் வருங்கால தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை வழிநடத்தும் எனவும் குறிப்பிட்டார்.




நிகழ்ச்சியில் புனேவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தில் மலரியல் ஆராய்ச்சி இயக்குனர் முனைவர் கே.வி.பிரசாத், அக்சென் ஹைவெஜ் விதை நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் செ.செந்தில்நாதன், சென்னை மண்டல தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் முதன்மை பொது மேலாளர் ஆர்.ஆனந்த் ஆகியோர் வருங்கால தோட்டக்கலை குறித்து எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் வெ.கீதாலட்சுமி, வேளாண் காலநிலை அறிவியலில் சிறப்பான பங்கினை அளித்தமைக்காவும், தோட்டக்

கலை முதன்மையர் முனைவர் பெ.ஜரின் வேதமணி, தோட்டக் கலையில் அறிவியலில் சிறப்பான பங்கினை அளித்தமைக் காகவும், விருதுகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக் கலை அறிவியலாளர்கள் முனைவர்கள் முத்துலட்சுமி, ஜே.அக்ஸிலியா, ஹரிப்பிரியா, விஜய் செல்வராஜ், அருண் குமார், சி.சுபேஷ் ரஞ்சித் குமார், பெ.ச.கவிதாஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.



# மறந்து போன காட்டு கீரைகளின் மகத்துவம் தெரியுமா?



பொதுவாக தென்மாவட்டங்களில் மானாவாரியாக விதைக்கப்பட்ட நிலங்களில் (நிலக்கடலை, பயறுவகை) பயிரிடப்பட்ட பகுதியில் களைச்செடியாக இந்த கீரைகள் அதிகமாக காணப்படும். இதனுடைய மருத்துவ குணமும் மகத்துவத்தை கிராமப்புறங்களில் உள்ளவர்கள் நன்றாக உணர்ந்து இருப்பதால் பல ஆண்டுகளுக்கு முன் புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் களை எடுக்க செல்லும் மகளிர் தங்களுடைய வீட்டு சமையலுக்கு தேவைக்காக பல கீரைகளை அறுத்து வீட்டுக் கொண்டு வந்து, பல கீரைகளின் தொகுப்பாக கதம்பக் கீரை மசியல் செய்து சாப்பிடுவார்கள். அப்படி சாப்பிடும் போது சாப்பாடு ருசியாகவும் கீரையின் பக்குவத்தால் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவார்கள். இந்த இரண்டு மாதங்களில் பெரும்பாலான நாட்களில் இந்த கீரை தான் மசியலாகவோ, பொறியலாகவோ செய்து சாப்பாடு வார்கள். அத்தகைய சத்துமிக்க மானாவாரி கீரைகளை இன்று நாம் மறந்து விட்டோம் என்பதை நினைவுபடுத்த இந்த பதிவை பதிவிடுகிறேன்.

நாம் அன்றாட உணவில் ஏதாவது ஒரு கீரையை சேர்த்துக் கொண்டால் அது நம்முடைய ஆரோக்கியத்தை பேணும் என்பதில் மாற்று கருத்து கிடையாது.

'சீரைத் தேடின் கீரை தேடு' என்பது பழமொழி. ஒரு நாளைக்கு நாம் சராசரியாக 40 கிராம் நார் சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும் என்பதே மருத்துவரின் அறிவுரை யாகும்.

### 1) மகிழி கீரை

இது செம்மண் நிலப்பரப்பில் களைச்செடியாக, தான் மழைக்காலங்களில் காணப்படும். இதனுடைய இலைகளை பிடுங்கி உணவாக சமைப்பார்கள்.

புரத சத்து மற்றும் வைட்டமின்அதிக அளவில் உள்ளது. முகத்தில் எண்ணெய பிசுபிசுப்பை எடுக்கக்கூடியது. இதை பண்ணை கீரை என்றும் கிராமப்புறங்களில் அமைக்கப்படு கின்றன. வயறு சம்மந்தமான பிரச்சனைகளுக்கு சிறந்த மருந்தாக இந்த கீரை பயன்படும்.

**2) மூக்கிரட்டை கீரை**

இதை சாரணத்தி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இது எல்லாவிதமான மண்கண்டங்களிலும் வளரக்கூடியது. இது புற்கள் வளர்ந்துள்ள இடங்களில், கூட்டம்கூட்டமாக கொடி போல படர்ந்து காணப்படும். இதை சமைத்து சாப்பிடுவதால் பற்கள் பலப்படும், ஈறுகள் வலுப் பெறும். மேலும் பித்தநீர் சுரப்பையும் ஊக்குவிக்கிறது. இந்த கீரைகளின் இலைகள் வேர்களை காயவைத்து பொடி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.




இது ஒரு வகையான களை செடியாக (WEEDS) இருந்தாலும் கூட அதனுடைய மருத்துவ குணம் அளப்பரியது. இந்த கீரையின் உலர்த்தப்பட்ட இலைகளை மூலிகை விற்பனைக்கு கிராக்கியாக உள்ளது. பிரபல இயற்கை மருத்துவ நிறுவனங்கள் நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்றனர் என்றால் வியப்பாக உள்ளது.

**3) குமிட்டிக்கீரை**

இது கிராமங்களில் அதிக அளவாக புரட்டாசி – கார்த்திகை மாதங்களில் காணப்படுகிறது. இந்த கீரையின் பூக்கள் சிவப்பு மற்றும் பச்சை நிறங்களில் அதனுடைய நிலங்களின் தன்மைகேற்ப காணப்படும்.

செரிமான பாதிப்பு மலச்சிக்கல், பித்தம், மூலம் உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வாக உள்ளது. இது முழு ஜீரண மண்டலத்தை காக்கிறது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

உடலில் உள்ள கெட்ட நீரை வெளியேற்றுகிறது. ஆனால் இதை பக்குவமாக சமைக்க வேண்டியது அவசியமாகும்.

**4) துத்திக்கீரை**

இது காடுகளின் வரப்போரங்கள், வேலி ஓரங்களில் காணப் படும். துத்தி மஞ்சள் நிற பூக்களுடன் காணப்படும். இலையை தண்ணீர் விட்டு அரைத்து அதில் வாய் கொப்பளித்தால் பற்களின் கூச்சம் போய் ஈறுகள் வலுப்பெறும்.

இலையை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து உடலுக்கு ஒத்தடம் கொடுத்தால் உடலில் வலி நீங்கும். இதை குளிக்கும் நீரில் போட்டு குளித்தால் உடல் புத்துணர்ச்சி பெறும்.

இதுபோன்ற எண்ணற்ற கீரைகள் களைச்செடியாக இருந்தாலும் கூட அவை மருத்துவ குணமுள்ளதாகவே இருக்கிறது. நம்முடைய விவசாயிகள் களை எடுக்க போனால் களை வெட்டுவதுடன் தங்களுக்கு உணவு தேவையான கீரைகளையும் தங்களுடைய வீடுகளில் வளர்க்கப்படுகிற ஆடு, மாடுகளுக்கு பசுந்தீவனத்தை சேகரித்து வருவார்கள். ஒரே கல்லில் 3 மாங்காய் எறிந்தது போல.

ஆனால் இன்று நாம் களைகளை அகற்றிட அதிக விசத் தன்மையுள்ள களைக்கொல்லிகளை பயன்படுத்தி மண்ணையும் நம்முடைய உடல் ஆரோக்கயத்தையும் கெடுத்து வருகிறோம்.

எதற்காக களைக்கொல்லி யின் பயன்பாடு? என்று கேட்டால் கூலியாட்கள் பற்றாக்குறையை தான் நாம் குறிப்பிடுகிறோம். அது தவறானது, நல்ல உழவு பயிற்சுழற்சி முறையாக கையாண்டாலே களைகள் அகற்றப்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# வாழையில் மாவுபூச்சியை கட்டுப்படுத்த தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் முன்னெடுப்பு

திருச்சி, நவ.15

காவிரியின் கரையில் உள்ள கரூர், திருச்சி மாவட்டங்களில் முக்கிய பயிர் வாழை. இப்பொழுது வாழை சாகுபடியில் இந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பெரிதும் எதிர்கொள்ளும் பிரச்சனை மாவு பூச்சிகளால் ஏற்படும் சேதாரம். இதை பற்றிய தகவல்களை பல்வேறு தரப்பட்ட விவசாயிகளிடமிருந்து அறிந்த திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மையம், இந்த மையத்தை சார்ந்த பூச்சியல் துறை விஞ்ஞானிகள் முனைவர் ஜெ.பூரணி, முனைவர் ஆ.மோகனசுந்தரம் ஆகியோருடன் கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மாவுப் பூச்சியை கண்டறிவது குறித்து கள ஆய்வு 14.11.24ல் மேற் கொண்டனர்.





அப்போது அறிகுறிகள், மாதிரிகள் சேகரிப்பு மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விவசாயிகளுக்குத் தெரிவித்தனர். இவர்களுடன் விரிவாக்கத் துறை விஞ்ஞானி முனைவர் சி.கற்பகம், இதை பற்றி பல்வேறு ஊடகங்கள் வழியே விழிப்புணர்வை ஏற்படுத்தி கட்டுபடுத்தும் முறைகளை ஊக்குவித்தனர்.

இந்த பூச்சிகள் முக்கியமாக வாழை தண்டுகள், இலைகள் மற்றும் பழங்களைத் தாக்கி பயிரின் தரத்தையும் மகசூல் அளவையும் குறைக்கின்றன. இந்த பூச்சிகள் முக்கியமாக கற்பூரவள்ளி வாழை ரகத்தை தாக்குகிறது. காய் பிடிக்கும் காலத்திற்கு முன்பு, பரவலான மழை இருக்கும் பொழுது இந்த பூச்சியானது மழை நீரின் மூலமாகவே அரித்து செல்லப்பட்டு




விடும். ஆனால் எப்பொழுதெல்லாம் மழை பரவலாக இல்லையோ அப்பொழுது இதன் தாக்கம் மிகவும் அதிகமாக காணப்படும். பொதுவாக இந்த பூச்சிகளுக்கு நீரை சோப்புடன் சேர்த்து நன்றாக படும்படி தெளித்தாலே ஆரம்ப கட்டத்தில் இதை கட்டுப்படுத்தலாம்.



வாழையில் மாவு பூச்சியை கட்டுபடுத்த ஒருங்கிணைந்த கட்டுபாட்டு முறையை கையாள வேண்டும். எறும்புகள் இந்த பூச்சிகளை பரப்புவதில் முக்கிய பங்கு வகிப்பதால் எறும்புக் கூட்டங்களை கண்டறிந்து, குளோரிபைரிபாஸ் 20 EC (2.5 மி.லி/லிட்டர்) கொண்டு அழிக்கவும். மண்ணின் ஆரோக் கியத்தை மேம்படுத்துவதற்கும், இயற்கை எதிரிகளின் பல்வேறு வகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் பருப்பு வகைகள் மற்றும் கொத்தமல்லி போன்ற ஊடுபயிர்களை பயிரிட்டு மேம்படுத்தலாம்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

வாழைப்பழ சீப்புகளை குளிர்பதனப் படுத்தும் போது, உயர் அழுத்த நீர்/சோப்பு நீர் ஜெட்டை பயன் படுத்தி மாவுபூச்சிகளை தவிர்க்கலாம். மீன் எண்ணெய் ரோசின் சோப்பு (10 கிராம்/லிட்டர்), மாட்டு சிறுநீர், வேம்ப விதை சாறு (NSKE) (30 மி.லி/லிட்டர்) மற்றும் வேப்ப எண்ணெய் (10 மி.லி/ லிட்டர்) போன்றவற்றை பயன்படுத்தி மாவுபூச்சி எண்ணிக் கையை குறைக்கலாம்.

பூச்சிகளை கொல்லக்கூடிய பூஞ்சான், Akanthomyces lecanii அல்லது Beauveria bassiana (5 மி.லி/லிட்டர்) ஆகியவற்றை பூச்சிகளின் மீது தெளிப்பதன் மூலம் மாவுபூச்சிகளின் எண்ணிக் கையை குறைக்கலாம். பாதிக்கபட்ட தண்டு மற்றும் இலை பகுதிகளில் தியாமெதாக்சம் 25% WG (0.4 கிராம்/லிட்டர்), பிப்ரோபிஜின் 25 EC (2 மி.லி/லிட்டர்), அல்லது ஸ்பிரோ டெட்ராமாட் 15.31 OD (1.4 மி.லி/லிட்டர்) ஆகியவற்றை 15 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும்.

மாவுபூச்சிகள் பொருளாதார ரீதியாக முக்கியமான வெப்ப மண்டல பூச்சி ஆகும். காலப்போக்கில், மாவுபூச்சி தொற்றினால் ஏற்படும் பொருளாதார இழப்புகள் அதிகரித்துள்ளன. கலாச்சார, இயந்திர, உயிரியல் மற்றும் இரசாயன கட்டுப்பாட்டு முறைகளை ஒருங்கிணைத்து பயன்படுத்துவது இயற்கைக்கு உகந்தது மட்டுமல்லாது, பொருளாதார நோக்கிலும் பயனுள்ளதாய் இருக்கும்.





மாவு பூச்சியால் பாதிக்கப்பட்ட வாழைகள் (இடம்: கண்டியூர், நடுவதியம் பஞ்சாயத்து குளித்தலை, கரூர் மாவட்டம்).

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# விதைப்பரிசோதனையில் முளைப்புத்திறனின் முக்கியத்துவம்

விதைப்பரிசோதனை என்பது விதையின் தரங்களான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக விதைகளின் கலப்பு போன்றவற்றை ஆய்வு செய்து விவசாயி களுக்கு நல்ல தரமான விதைகள் கிடைக்க செய்வதாகும். விதைகளின் தரத்தை உறுதி செய்யும் முக்கிய இடம் விதைப்பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் ஆகும்.

விதை உற்பத்தி செய்வோர், விற்பனை செய்பவர்கள் மற்றும் விவசாயிகள் அனைவரும் தங்களிடம் உள்ள விதைகளின் தரத்தை அறிந்து விதைகளை விதைப்பதால் அதிக மகசூல் பெற்று லாபம் பெறலாம்.

குறைந்த முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விதைப்பு செய்வதின் மூலம் ஏற்படும் இடர்பாடுகளை குறைப்பதே விதை பரிசோதனை நிலையங்களின் நோக்கம் ஆகும்.

விதைக்க உபயோகப்படுத்தப்படும் விதைகளை அந்தந்த மாவட்டங்களில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைகளின் தரத்தை துல்லியமாக பரிசோதித்து பிறகு விதைக்க வேண்டும். விதை தரத்தின் முக்கிய காரணி யான முளைப்புத்திறன் மற்றும் வீரியம் எப்படி விதைப் பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறித்த சிறு விளக்கம்.

முளைப்புத்திறன் ஆய்வுகள் தூய விதைகளில் இருந்து மேற்கொள்ளப்படுகிறது. குறைந்தபட்சம் 400 விதைகளில் இருந்து 4 முறை 100 விதைகள் எடுப்பதும் அல்லது 8 முறை 50 விதைகள் எடுப்பதும் அல்லது 16 முறை 25 விதைகள், விதைகளின் உருவளவு பொறுத்து விதைக்க எடுக்கப்படுகிறது. முளைப்புத்திறன் பரிசோதனை, விதை முளைப்பதற்கு சாதகமான சூழ்நிலைகளான ஈரப்பதம், தட்பவெட்பநிலை, ஊடகம் மற்றும் ஒளி அளவு போன்றவற்றில் மேற் கொள்ளப்படுகிறது.

விதைகள் முளைப்பதற்கு தேவையான ஈரப்பதத்தை வழங்கு வதுடன் அவை மேற்பரப்பில் முளைப்பதற்கான சாதகமான சூழலையும் உருவாக்குகிறது.

**பயன்படுத்தப்படும் ஊடகங்கள்**

மணல் மற்றும் விதைகள் முளைப்பதற்கு உரிய தாள் ஆகும். மணல் துகள்கள் பெரியதாகவும் இல்லாமல் மிகச்சிறியதாகவும் இல்லாமல் இருத்தல் அவசியம். மணலில் எந்தவித நச்சும், நோய் பரப்பும் கிருமிகளும் இருத்தல் கூடாது. அப்படி ஏதேனும் கண்டறியப்பட்டால் மணலை ஆவியில் வேகவைத்து (Autoclave) கிருமி நீக்கம் செய்து பயன்படுத்தப்படுகிறது.

மணலை ஊடகமாக உபயோகிக்கும் போது முளைக்க வைக்கும் தட்டுகள் பயன்படுத்தப்படுகிறது.



பொதுவாக பயன்படுத்தப்படும் ஊடகங்கள் உறிஞ்சி தாள் மற்றும் வடித்தாள் ஆகும். இந்த தாள்களுக்கு நீரை மேல் நோக்கி (30 மில்லி மீட்டர் உயரம் / நிமிடம்) உறிஞ்சும் தன்மை உள்ளதாக இருக்க வேண்டும். நச்சுத்தன்மை மற்றும் பூஞ்சணம் அல்லது பாக்டீரியா கிருமிகள் இல்லாமல் இருக்க வேண்டும். ஆய்வின்போது ஈரப்பதத்தை காக்கும் தன்மையும் இருக்க வேண்டும். இந்த தாள்களின் நய அமைப்பானது விதைகளில் இருந்து முளைக்கும் செடிகளின் வேர்கள் பக்கவாட்டில் அல்லது மேலாக வளருமாறு இருக்க வேண்டும். உறிஞ்சி தாள்களை 8 அல்லது 10 மடிப்புகளாக மடித்து பள்ளத்தில் போதிய இடைவெளிவிட்டு விதைகளை வைத்து மடக்கி இருபக்கமும் நூல்கொண்டு கட்டவேண்டும். இந்தமுறை மூலம் நெல் மற்றும் பயறுவகைப் பயிர்கள் ஆய்வு செய்யப்படுகிறது.




இப்படி வைக்கப்படும் விதைகள், பல்வேறு பயிர்களுக்கு தேவையான கட்டுப்படுத்தப்பட்ட தட்பவெப்பநிலை (25°C) அறையின் ஈரப்பதம் ( 90%) மற்றும் ஒளியின் அளவு (750 முதல் 1250 LUX) உள்ள முளைப்பு அறையில் வைக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பராமரிக்கும் விதைகளின் முளைப்பு திறனை இயல்பான நாற்றுகள், இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள் மற்றும் முளைக்காத விதைகள் என்று கணக்கிடப் படுகிறது. இயல்பான நாற்றுகள் என்பவை பயிருக்கு சாதகமான சூழ்நிலைகளான மணல், நீர், தட்பவெட்பநிலை மற்றும் ஒளியின் தூண்டுதலால் விதையின் உள்ளே இருக்கும் சத்து பொருள் களின் உதவியால் புதிய முழு செடியாக வளர்ச்சியடைகிறது. இயல்பற்ற நாற்றுகள் வளர்வதற்கு சாதகமான சூழல் அமைந்திருந்தாலும் இவ்வகை நாற்றுகள் சிதைந்தும் வளர்ச்சி குன்றியும் அழுகியும் நன்கு வளர்ச்சியடையாமல் இருக்கும். கடின விதைகள் ஆய்வுக்காலம் முடியும் வரை ஈரத்தை உறியாமலே கடினமாக காணப்படும். (பயறு வகை விதைகள்).


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

உயிரற்ற விதைகள் ஆய்வுக்காலத்தின் முடிவில் கடின மில்லாமல் புதியதாகவும் இல்லாமல் நாற்றுகள் முளைக் காமலும் இருக்கும்.

இவ்வகை விதைகள் உடையும் தன்மை உடனும் அவற்றை அழுத்தினால் பால் போன்ற பசையும் வெளிவரும் நிலையிலும் இருக்கும்.

முதல் ஆய்வின் முடிவுகள் திருப்திகரமாக இல்லாவிடில் அவை வெளியிடப்படாமல் வைத்திருந்து பின்னர் மறு ஆய்வு செய்து மூ அதிக வித்தியாசம் இருந்தால் மறுஆய்வு செய்யப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

இயல்பான நாற்றுகள் சதவிகிதம் முழு எண்ணாக கணக்கிடப்படும் மற்ற இயல்பற்ற நாற்றுகள், கடின விதைகள், முளைக்காத விதைகள் மற்றும் உயிரற்ற விதைகள்




ஆகியவையும் கணக்கிடப்பட்டு இறுதி கணக்கெடுப்பு நாள் அல்லது அதற்கு முன்பாக விவசாயிகளுக்கு, விதை உற்பத்தி யாளருக்கு முடிவு அறிவிக்கப்படும்.

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம், 15,காளியம்மன் கோவில் தெருவில் இயங்கிவரும் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தில் பயிர் இரகம் மற்றும் முழுவிலாசத்துடன் ஒரு விதைக்குவியலுக்கு ரூ80 மட்டும் செலுத்தி ஆய்வு செய்து பயனடையலாம் என நாகப்பட்டினத்திற்கான தஞ்சாவூர் சரக விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்

Stanes

# பயிரின் வேர்களைத் தாக்கும் நூற்புழு பிரச்சனையா?



வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்

பயன்படுத்துவீர்.....

## பயோ நெமட்டான்




"இது வேர்களைத் தாக்கும் தீமைசெய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது"

- ஆரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது



ஏக்கருக்கு 2 லிட்டர்

டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்

8/23-24, ரேஸ்கோர்ஸ் சாலை,
கோயமுத்தூர் - 641018

தொடர்புக்கு : 84899 04949

தமிழ்நாடு மேலாளர்: 9344914955
கோவை , ஈரோடு : 9344914956
சேலம் : 9344914948
திருச்சி: 9344914943
மதுரை : 9344914935
வேலூர் : 9344914938